## ‘ஒரே நாடு – ஒரே தேர்தல்’ திட்டவடிவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்! ஆளுநர் ஆர்.என்.ரவியின் அத்துமீறல் நடவடிக்கைகளுக்குக் கண்டனம்! பாலியல் குற்றம் புரிவோர்க்கு கடும் தண்டனை சட்ட முன் வடிவு – முதல்வருக்கு நன்றி!

# ‘வெல்வோம் இருநூறு - படைப்போம் வரலாறு’ - கழக சட்டத் துறை சூளுரை!

## தி.மு.க. சட்டத் துறை மாநாட்டில் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் 5 தீர்மானங்கள் – ஒருமனதாக நிறைவேற்றம்!



தி.மு.க. சட்டத்துறை 3வது மாநில மாநாட்டில் பங்கேற்று, மாநாட்டு நிறைவுப் பேருரையாற்றிய கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, கழக சட்டத்துறைச் செயலாளர் – மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. மற்றும் சட்டத்துறை நிர்வாகிகள் நினைவுப் பரிசுகள் வழங்கிய போது எடுத்த படம். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., திருச்சி சிவா எம்.பி., அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, பி.கே.சேகர்பாபு மற்றும் முன்னணியினர் உடன் உள்ளார்கள்.

**சென்னை, ஜன.20–**

**சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற, கழக சட்டத்துறையின் 3வது மாநாட்டில், “வெல்வோம் இருநூறு – படைப்போம் வரலாறு!” என கழக சட்டத்துறை சூளுரைக்கும் தீர்மானம் உள்ளிட்ட 5 முக்கியத் தீர்மானங்களும், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானமும், கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டது.**

இத்தீர்மானங்களை, மூத்த வழக்கறிஞர் ஆர்.சண்முகசுந்தரம் படிக்க, அதனை கழக வழக்கறிஞர்கள் அனைவரும் கரவொலி எழுப்பி வரவேற்று, தீர்மானங்களை ஒரு மனதாக நிறைவேற்றினார்கள்.

இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :-

**முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மறைவுக்கு இரங்கல்!**

இந்தியாவின் முன்னாள் பிரதமர் - உலகம் போற்றும் பொருளாதார மேதை டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் ஆட்சிக் காலத்தில், வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு 21 தமிழர்கள் பல்வேறு அமைச்சகங்களில் பணியாற்றினர் என்பது வரலாறு.

தமிழர்களின் உரிமைகளையும், கோரிக்கைகளையும் உடனடியாக நிறைவேற்றித் தந்த பெருந்தன்மைக்குச் சொந்தக்காரர், டாக்டர் மன்மோகன் சிங் ஆவார்.

குறைந்த பேச்சும், நிறைந்த செயலும் கொண்ட முன்னாள் பிரதமர் மறைவுக்கு இம்மாநாடு தமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

**ஒரே நாடு - ஒரே தேர்தல் திட்ட வடிவை ஒன்றிய பா.ஜ.க. அரசு திரும்பப் பெற வேண்டும்!**

‘ஒரே நாடு - ஒரே தேர்தல்’ திட்ட வடிவிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி, நாடாளுமன்றத்தில் குளிர் காலக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட்ட, அறிமுக நிலையிலேயே மசோதாவுக்கு எதிர்க் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

‘பணச்சிக்கனம்’ என்ற ஒரு பொய்யான காரணத்தைத் தவிர வேறு எந்தக் காரணமும் இல்லாமல், அரசியல் சட்டத்திற்கு ஒவ்வாத, நடைமுறையில் சாத்தியமில்லாத, தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளின் காலத்தை ஒன்றிய அரசு எதேச்சதிகாரப் போக்கில் முடிவு செய்ய வழி வகுக்கும் இந்த அரசியல் அமைப்பு சட்டத் திருத்தத்தினை ஒன்றிய அரசு திரும்பப் பெற இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

எல்லா அரசியல் கட்சிகளும் இந்த சட்டத் திருத்தத்தினை எதிர்த்திடவும் இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது. கெடுவாய்ப்பாக அந்தச் சட்டம் நிறைவேற்றப் படும் நிலையில் தகுந்த வழக்குகளைத் தொடருவது என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

**ஆளுநர் ஆர்.என். ரவியின் அத்துமீறல் நடவடிக்கைகளுக்குக் கண்டனம்!**

ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள் தொடர்ந்து அத்துமீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார். தமிழர்களையும், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களையும் அவமானப்படுத்துகின்ற ஒரு செயலாக, கழக அரசின் சாதனைகளை - செய்யவிருக்கும் திட்டங்களைக் கொண்ட உரையினைப் படிக்காமல் வெளியேறுவது, மரபை மீறுகிற செயலாகக் கருதி, தமிழர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

தமிழகச் சட்டமன்றம் நிறைவேற்றும் சட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்காமலும், துணை வேந்தர் நியமனங்களில் அரசியலமைப்புச் சடத்திற்கு விரோதமாகவும், மாநில சுயாட்சியைக் குலைக்கும் வகையிலும் ஆளுநர் நடந்து கொள்வது ஜனநாயகத்தைச் சீர்குலைத்திடும் வகையில் உள்ளது.

> கழகத் தலைவர் – முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தி.மு.கழகக் கூட்டணி கடந்த 2019, 2021, 2024 ஆகிய மூன்று தேர்தல்களில் தொடர்ந்து வெற்றி பெற்று வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது. “வெல்வோம் இருநூறு – படைப்போம் வரலாறு” என்று கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்கள் முழங்கி வருவதை இம்மாநாடு 2025–2026 பொதுத் தேர்தல் காலத்தை, ஓய்வறியா களப்பணிகளை மேற்கொண்டு 200 தொகுதிகளை கழகத் தலைவரின் கரங்களில் ஒப்படைத்திட சூளுரை மேற்கொள்கிறது.

பாசிச பா.ஜ.க.வின் ஊதுகுழலாகச் செயல்பட்டு சட்டப்பேரவையின் மாண்பைச் சீர்குலைக்கும் ஆளுநர் ஆர்.என். ரவியின் அத்துமீறல் நடவடிக்கைகளை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

**பாலியல் குற்றம் புரிவோருக்கு கடும் தண்டனை சட்ட முன்வடிவு - முதலமைச்சருக்கு நன்றி!**

கல்வி பயில விருப்பத்துடன் வருகின்ற தமிழ்நாட்டின் மாணவியர்களிடமும், அவர்தம் பெற்றோர்களிடமும், தேவையற்ற அச்ச உணர்வை ஏற்படுத்தும் வகையில், சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பில் அமர்ந்து கொண்டு, பொறுப்பற்ற முறையில் வீண் வதந்திகளைப் பரப்பி, அரசியல் இலாபம் கருதி, எடப்பாடி பழனிசாமி அவர்கள் வடிகட்டிய பொய்யை, அறிக்கையாக விடுத்தும், சுவரொட்டிகள் மூலமாகவும், தேவையில்லாத அச்ச உணர்வை பொது மக்கள் இடையே ஏற்படுத்துகின்ற வேலையினை தொடர்ந்து செய்து வருகிறார்.

பொள்ளாச்சி பாலியல் வன்புணர்வுச் சம்பவத்தை மூடி மறைத்து குற்றவாளிகளைப் பாதுகாத்த எடப்பாடி பழனிசாமியின் ஆணவப் போக்கினை இம்மாநாடு கடுமையாகக் கண்டிப்பதுடன்,

மகளிரைப் பின் தொடர்ந்தால் 5 ஆண்டு கடும் சிறை தண்டனை என்பது உள்ளிட்ட, இரண்டு சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்து “பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு” என்று அறிவித்த கழகத் தலைவர் - முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இம்மாநாடு தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

**ஓய்வு பெற்ற நீதியரசர் சத்திய நாராயணன் தலைமையில் ஆணையம்! முதல்வருக்கு நன்றி!**

ஒன்றிய அரசு கொண்டு வந்த மூன்று குற்றவியல் சட்டங்களும், குற்றம் சாட்டப்பட்டவர்கள், புகார்தாரர்கள், புலன் விசாரணை அமைப்புகள், நீதி மன்றங்கள் என அனைவருக்கும் பாதகமான சட்டப்பிரிவுகளை உள்ளடக்கி குற்றவியல் வழக்கு விசாரணைகள் மிகவும் பாதிக்கக் கூடிய நிலையை உருவாக்கியுள்ளன.

கழகத் தலைவரின் வழி காட்டுதல்களின் அடிப்படையில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்தும் கூட எதிர்க்கட்சி உறுப்பினர்களை ஒட்டுமொத்தமாய் இரு அவைகளிலிருந்தும் வெளியேற்றி சர்வாதிகாரமாய் அந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. கழகத் தலைவரின் சொல்லுக்கிணங்க அந்தச் சட்டங்களை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு, அவை நிலுவையில் உள்ளன.

இந்நிலையில் அந்தச் சட்டங்களை ஆய்வு செய்து அறிக்கை தந்திட, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, ஆணையம் அமைத்து ஓய்வு பெற்ற நீதியரசர் சத்தியநாரயணன் அவர்களை அதற்கு நியமித்து நல்லதைச் செய்யும் ஆட்சி இதுவென நாமெல்லாம் நெஞ்சம் நிமிர்ந்திடச் செய்த கழகத் தலைவர் முதல்வர் அவர்களுக்கு இந்த மாநாடு நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறது.

**“வெல்வோம் இருநூறு - படைப்போம் வரலாறு!” கழக சட்டத்துறை சூளுரை!**

கழகத் தலைவர் - முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தி.மு.கழகக் கூட்டணி கடந்த 2019, 2021, 2024 ஆகிய மூன்று தேர்தல்களில் தொடர்ந்து வெற்றி பெற்று வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது.

“வெல்வோம் இருநூறு - படைப்போம் வரலாறு” என்று கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் முழங்கி வருவதை இம்மாநாடு 2025-2026 பொதுத் தேர்தல் காலத்தை, ஓய்வறியா களப்பணிகளை மேற்கொண்டு 200 தொகுதிகளை கழகத் தலைவரின் கரங்களில் ஒப்படைத்திட சூளுரை மேற்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



சென்னை கலைவாணர் அரங்கத்தில், நேற்று முன்தினம் (18.01.2025) தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் நடைபெற்ற பொங்கல் கலைவிழா இசை சங்கமம் மெல்லிசை நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு, நிகழ்ச்சியில் பங்கேற்ற திரைப்பட இசைக் கலைஞர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் / தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் விஜயா தாயன்பன், தி இந்து குழுமம் இயக்குநர் என்.ரவி மற்றும் திரைப்பட இசைக் கலைஞர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (18.01.2025) தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் நடைபெற்ற பொங்கல் கலைவிழா இசை சங்கமம் மாபெரும் மெல்லிசை நிகழ்ச்சியினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் / தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் விஜயா தாயன்பன், தி இந்து குழுமம் இயக்குநர் என். ரவி மற்றும் திரைப்பட இசைக் கலைஞர்கள்,அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.